# DEO MAIN EXAM 2023
# MODEL EXAM I

## கட்டாயத்தமிழ் தகுதித்தேர்வு

**நேரம் : 3 மணி** **மொத்த மதிப்பெண்கள்: 100**

**கேள்வி எண் 1** **15 மதிப்பெண்கள்**

1. **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக**

   1. புகழின் சிறப்புகளை வள்ளுவர் வழி நின்று விளக்குக
   2. அன்புடைமை என்னும் அதிகாரத்தில் வள்ளவர் கூறும் கருத்துக்களை தொகுத்து எழுதுக
   3. புலால் மறுத்தலை வள்ளுவர் வழிநின்று விளக்குக
   4. நட்பு மற்றும் கூடாநட்பு என்னும் அதிகாரங்களில் நட்பு குறித்து வள்ளுவர் கூறும் அறிவுரைகள் யாவை?
   5. மனித வாழ்வில் ஊக்கத்தின் அவசியத்தினை வள்ளுவர் எவ்வாறு வலியுறுத்துகிறார்?

**கேள்வி எண் 2** **10 மதிப்பெண்கள்**

2. **பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்கு சுருக்கமாகவும், தெளிவாகவும் சரியான விடை எழுதுக**

சாலை விதிகளுக்கு உட்பட்டு, வாகனம் ஓட்டும் முறைகளை அறிந்து, வாகனங்களை இயக்கினால் விபத்துகளைத் தவிர்க்கலாம்.

ஓட்டுநர், வாகனத்தைச் சாலையின் இடப்புறத்தில் செலுத்துவதுடன், எதிரே வரும் வாகனத்திற்கு வலப்புறமாய்க் கடந்து செல்லப் போதிய இடம் விட வேண்டும்.

சந்திப்புச்சாலைகள், பயணிகள் கடக்கும் இடங்கள், திரும்பும் இடங்கள் ஆகியவற்றை நெருங்கும் போது வாகனத்தின் வேகத்தைக் குறைக்க வேண்டும். அவ்விடங்களில் இருப்பவர்களுக்கு எவ்வித ஆபத்தும் நேராது என்று உறுதி செய்த பிறகே கடந்து செல்ல வேண்டும்.

சாலைச்சந்திப்பில் நுழையும்போது, அந்தச் சாலையில் எற்கெனவே செல்லும் வாகனங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

தீயணைப்பு வாகனம், அவசரச்சிகிச்சை ஊர்தி ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளித்து, அவை தடையின்றிச் செல்வதற்குக் கண்டிப்பாய் வழிவிட வேண்டும்.

எல்லா ஒட்டுநர்களும் தேவையான இடங்களில் கை சைகை அல்லது வாகன எச்சரிக்கை விளக்குகளைத் தவறாமல் பயன்படுத்த வேண்டும்.

மலைச்சாலைகள், மிகவும் சரிவான சாலைகள் ஆகியவற்றில் மேல்நோக்கி வரும் வாகனங்கள் கீழ்நோக்கிச் செல்லும் வாகனங்கள் பாதுகாப்பாய்க் கடந்து செல்ல முன்னுரிமை தர வேண்டும்.

**வினா**

1. விபத்துகளை எவ்வாறு தவிர்க்கலாம்?
2. கண்டிப்பாய் வழிவிட வேண்டிய வாகனங்கள் யாவை?
3. சாலைச் சந்திப்புகளில் எவற்றுக்கு முதலிடம் தர வேண்டும்?
4. மலைச்சாலைகளில் பின்பற்ற வேண்டிய விதிமுறை யாது?

 044-24339436, 42867555, 9840226187

5. வாகனம் செலுத்தும் முறையை எழுதுக.

**கேள்வி எண்.3** **10 மதிப்பெண்கள்**

**3. கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை**

தமிழ் இலக்கியம் தொன்மையானது பண்பட்டது வரலாற்றுச்சிறப்புடையது. பிற நாட்டினர் நாகரிக நிலையை எட்டாத காரத்திலேயே தமிழ், நாகரிகம் பெற்ற நன்மொழியாய், இலக்கிய வளம் படைத்த பெருமொழியாய் விளங்கியது.

'உலகப்பொதுமறை' எனப் போற்றப்பெறுவது, திருக்குறள், அ∴து ஒப்புயர்வற்ற வாழ்வியல் நூல். ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள், போற்றிப்பனுவல்கள் முதலியன இலக்கிய கருவூலங்களாகும். தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், நம்பியகப்பொருள், தண்டியலங்காரம், மாறனலங்காரம், புறப்பொருள் வெண்பா மாலை முதலியன இலக்கணச்செல்வங்களாகும். பக்தி இலக்கியங்கள் தமிழ்மொழியின் இனிமைக்குச் சான்றாய் நின்று நிலவுகின்றன.

இத்தகைய வளமான தாய்மொழிவழியில் கலிவ கற்காது, பிறமொழி வழியாய்க் கல்வி கற்க முயல்வது வேதனைக்குரியதாகும்.

தாய்மொழிவழி கற்பவன்தான் சிந்தனை ஆற்றலைப் பெற இயலும், எண்ணியதை எண்ணியவாறு வெளியிட இயலும், தான் உணர்ந்ததை உணர்ந்தவாறு உணர்த்த இயலும். தமிழைத் தாய்மொழியாய்க் கொண்டவன் தென்னைமரத்தைப்பற்றி ஆங்கிலத்தில் எழுத, முதலில் தமிழில் சிந்தித்துப் பின்னர் அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுகிறான். நினைத்தவாறே அவனால் உடனே எழுத இயலுமா? இயலாது. ஆனால், தாய்மொழியில் சிந்திப்பவனால் உடனே எழுத இயலும். ஏனென்றால், அங்கு மொழிபெயர்ப்பு வேலை இல்லை. ஆகவே, தாய்மொழி வழியே கற்பது சிறந்தது ஆகும்.

கால மாற்றத்திற்கேற்ப மொழியில் புதிய இலக்கிய வடிவங்கள் தோன்றுகின்றன. மரபுக்கவிதை ஆட்சி செய்துகொண்டிருநத தமிழ் இலக்கிய உலகில் இன்று புதுக்கவிதை போர்முரசு கொட்டிக்கொண்டிருக்கிறது. ஆம், கலில்கிப்ரான், வால்மிட்மன், தாகூர் போன்ற கவிஞர்களின் புதிய பாணியில் கட்டுண்டு, புதிய சிந்தனையுடன் புதுக்கவிதைகள் பலவற்றை இன்று கவிஞர்கள் படைத்துத் தமிழைச் கெழுமைப்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

பழங்காலத் தமிழர்கட்கு அறிவியல் உணர்வு இருந்தது; அறிவும் செயல்பாடும் இருந்தன. ஆனால், அவற்றை நெறிமுறைப்படுத்தி இலக்கியங்களாய் ஆக்க அவர்கள் ஏனோ முயலவில்லை. பின்பு ஏற்பட்ட ஆங்கில ஆளுமையும் தமிழின் அறிவியல் வளர்ந்துள்ளது. அந்த வளர்ச்சியை முடமாக்கிவிட்டது. இன்று அறிவியல் வளர்ச்சி எண்ணிப் பார்க்க இயராத அளவிற்கு வளர்ந்துள்ளது. அந்த வளர்ச்சிக்கு ஈடுகொடுத்துத் தமிழ் வளர வேண்டுமானால், அந்த வளர்ச்சியினை அன்றாடம் தமிழினில் கொண்டுவர வேண்டும். அதற்கு ஒரே வழி, மொழிபெயர்ப்பாகும்.

அறிவியல் துறைகளுக்கான சொற்களைப் படைப்பதும், அவ்வத்துறைகளிலே சிறந்த நூல்களை உருவாக்குவதுமே இன்றைய தமிழனின் கடமையாக வேண்டும். கலைச்சொற்களையும் அறிவியல் நூல்களையும் நாம் உருவாக்கிக்கொண்டே இருந்தோமானால், சில ஆண்டுகளில் தமிழும் அறிவியல் துறையில் வளம் பெற்றதாக ஆகிவிடும்.

தமிழகம் அறிவியலில் உயர்ந்து நிற்க நாம் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் இரண்டு. ஒன்று, அறிவியல் வளர்வதற்கேற்ற கல்வியறிவைத் தர வேண்டும். இரண்டு, அக்கல்வியறிவைத் தாய்மொழிவழியாய்த் தர வேண்டும்.

**கேள்வி எண் 4:** **10 மதிப்பெண்கள்**

**4. பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)**


044-24339436, 42867555, 9840226187

மனித நாகரிகத்தின் வளர்ச்சி – நிலையான இருப்பிடமின்றி – வேட்டைச் சமூகம் - ஆற்றங்கரை, சமவெளிப் பகுதிகள் - உற்பத்தி கருவிகள் - சக்கரம், படகு – பண்டமாற்று முறை – புறவளர்ச்சிக்கு உற்பத்தி கருவிகள் - இனக்குழுக்கள்

**கேள்வி எண் 5: 10 மதிப்பெண்கள்**

**5. பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக**

போர்க்களத்திலும் ஆநிரை கவரும் சண்டைகளிலும் வீரமரணம் அடைந்தவர்களின் நினைவாக நடுகற்கள் நடப்பட்டன. முல்லை நில வாழ்க்கையில் மக்களின் சிறப்பான செல்வ வளமாகக் கால்நடைகள் (ஆநிரைகள்) இருந்தன. அருகருகே வாழ்ந்த இனக்குழுவினர் மற்ற குழுவினரின் கால்நடைகளைக் கவர்ந்து தமதாக்கிக் கொள்வதற்காகச் சண்டையிட்டுள்ளனர். முல்லை நில மக்களின் தலைவன் எதிரிகளை எதிர்த்துப் போரிட்டுக் கால்நடைகளைக் கவர்ந்து வருவதுண்டு. இதை எதிர்த்து போரிடுபவரும் உண்டு. அப்போது இறந்துபடும் வீரர்களைத் தியாகிகளாகப் போற்றி அவர்களின் நினைவாக நடுகற்களை நிறுவினர். போர்க்களக் காட்சிகளையும், நடுகற்களைக் குறித்தும், அவற்றை வழிபட்ட முறைகளைக் குறித்தும் சங்க இலக்கியங்களில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நடுகற்கள் நடப்படுவதற்கான வழிமுறைகள் குறித்து தொல்காப்பியம் விரிவாக எடுத்துரைக்கிறது.

தேனி மாவட்டத்தின் புலிமான்கோம்பை, தாதப்பட்டி ஆகிய இடங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தின் பொற்பனைக்கோட்டை என்ற இடத்திலும் தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட சங்க கால நடுகற்கள் காணப்படுகின்றன. சங்ககாலத்தைச் சார்ந்த நடுகற்களில் உருவம் அல்லது சிலைகள் காணப்படவில்லை.

சங்க காலத்திற்குப் பிறகும், பல்லவர் காலத்திலும் நடப்பட்ட நடுகற்கள் முல்லை நிலப்பகுதிகளில் பெரிதும் காணப்படுகின்றன. குறிப்பாக, திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம் என்ற ஊரினைச் சுற்றியுள்ள பகுதிகளில் பரவலாக இத்தகைய நடுகற்களைக் காணலாம். யாருடைய நினைவாக அந்த நடுகற்கள் நடப்பட்டனவோ, அந்த வீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டு வீரர் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

**கேள்வி எண் 6 : 10 மதிப்பெண்கள்**

**பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்**

Two inscriptions (919 and 921) from a Brahmadeya (tax-free land gifted to Brahamans) called Uttaramerur (historically called Uttaramallur Caturvedimangalam) give details of the process of electing members to various committees that administered the affairs of a Brahmin settlement. This village was divided into 30 wards. One member was to be elected from each ward. These members would become members of different committees: public works committee, tank committee, garden committee, famine committee and gold committee.

The prescribed qualifications for becoming a ward member were clearly spelt out. A male, above 35 but below 75, having a share of property and a house of his own, with knowledge of Vedas and bhasyas was considered eligible. The names of qualified candidates from each ward were written on the palm-leaf slips and put into a pot (kudavolai). The eldest of the assembly engaged a boy to pull out one slip and would read the name of the person selected.

**கேள்வி எண் 7: 15 மதிப்பெண்கள்**

**அலுவலகக் கடிதம்**

**ஏதேனும் ஒன்றிற்கு விடையளி**

அ. முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட அரசாணை வரைக

ஆ. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை சார்பாக நெகிழி இல்லா தமிழகம் படைக்க அனைத்து அரசு துறைகளும் ஒத்துழைப்பு வழங்குமாறு கடிதம் ஒன்றினை வரைக

இ. தமிழக தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பாக நடக்கவிருக்கும் உலக தொழில் முதலீட்டு மாநாட்டிற்கு திட்ட மதிப்பு அறிக்கை ஒன்றை வரைக.

**கேள்வி எண் 8:** **20 மதிப்பெண்கள்**

**a. கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

1. பண்பாடு
2. ஆலோசனை
3. அழியாத செல்வம்
4. நல்லறம்

**b. பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க**

1. வெல்லம்
   வெள்ளம்

2. துலை
   துளை

3. வளி
   வழி

4. பல்லி
   பள்ளி

**c. பிரித்து எழுதுக**

1. உயிரினம்
2. இடப்புறம்
3. நன்மாடங்கள்
4. சிறிதளவு

**d. எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. அவர்கள் விளையாட்டு வீரர்கள்
2. கண்ணகி மதுரைக்குச் சென்றாள்
3. வயலில் ஆடுகள் மேய்ந்தன
4. தமிழரசி புதுவைக்குச் சென்றிலள்

**e. பிழை நீக்கி எழுதுக**

1. முருகன் கவிதைகள் எழுதுகிறார்

2. மாணவர்கள் விடையை எழுதினார்

3. பூனை எலியைப்பிடித்தன

4. மான் காட்டில் மேய்ந்தன

APPOLO STUDY CENTRE